# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 42/2020

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 9 (lw 12) | நாள் | 09.08.2324 |
| பெயர் | பாபு | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | கொத்தனார் |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 42 |

(எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் சம்பக்கட்டளை திருவெண்காடு என்ற பகுதியில் வசித்து வருகிறேன். கொத்தனார் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் பெயர் அகோரம். இந்த வழக்கை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வைமகசரில் உள்ள சாட்சி கையெழுத்து என்னுடையது இல்லை. அதிலுள்ள முதல் சாட்சி கையெழுத்து ராமையன் என்று உள்ளது அது எனது மாமா அவர் இறந்து விட்டார். அந்த கையெழுத்து அவருடையதா என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை

திருவெண்காட்டில் சம்பாக்கட்டளை என்ற இடம் உள்ளது என்றால் சரி. அங்கு எதிரி அகோரம் என்பவருக்கு சொந்தமான மாந்தோப்பு உள்ளது என்றால் சரி. மாந்தோப்புக்கு செல்லும் வழியில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் தார்சாலை உள்ளது என்றால் சரி. 14.03.2016 அன்று மாலை 04.00 மணிக்கு அந்த மாந்தோப்பில் திருவெண்காடு காவல் ஆய்வாளர் சம்பவ இடத்தை பார்வை யிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த மாந்தோப்பு நான்கு புறமும் முள்வேலியால் அடைக்கப்பட்டுள்ளது

என்றால் தெரியாது. என் முன்னிலையிலும் என் மாமா ராமையன் முன்னிலையிலும் திருவெண்காடு காவல் ஆய்வாளர் 14.03.2016 அன்று மாலை 16.30 மணிக்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மாதிரி வரைபடம் எங்கள் முன்பாக தயார் செய்தார் என்றாலும் அந்த பார்வை மகசரில் நான் சாட்சி கையெழுத்து செய்து விட்டு எதிரி எனது பங்காளி என்பதால் அதிலிருந்து முரண்பட்ட நிலையில் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.